**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.**
**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 562/2022.**
**வழக்கு சாட்சி – அ.சா. 1.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திருமதி. ரேவதி. | ஜாதி | |
| தந்தை பெயர் | முருகன். | தொழில் | தனியார் வங்கிப் பணி. |
| கிராமம் | அல்லிநகரம். | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 31/2026. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 16.02.2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்).**

**அரசுத் தரப்பு முதல் விசாரணை:–**

நான் தற்போது, அல்லிநகரத்தில் குடியிருந்துகொண்டு, தனியார் வங்கியில் பணி செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகள் எனது பக்கத்து வீட்டுக்காரர்கள். நான், எனது கணவர் சுரேஸ், என் மாமனார் காமாட்சி, மாமியார் ஜெயலெட்சுமி மற்றும் எனது குழந்தை நிலாவுடன் வெள்ளையன் தெரு, அல்லிநகரத்தில் கூட்டுக் குடும்பமாக வசித்து வருகிறோம். எதிரிகள் எங்கள் வீட்டிற்கு அருகே பாதையை மறைத்து சுவர் கட்டியிருந்தார்கள். அதை அகற்றக் கோரி நகராட்சியில் நாங்கள் மனுக் கொடுத்திருந்தோம். நகராட்சியிலிருந்து ஆட்கள் வந்து பார்த்துவிட்டு, பொதுப் பாதையில்தான் சுவர் இருக்கிறது என தீர்வு கண்டு, கடந்த 20.04.2018 ஆம் தேதியன்று அதை அகற்றிவிட்டார்கள். சுவரை இடித்ததற்கு நாங்கள்தான் காரணம் என எதிரிகள் நினைத்துக்கொண்டு, கடந்த 20.04.2018 ஆம் தேதி இரவு 08.00 மணிக்கு, எங்கள் வீட்டிற்கு முன்பாக எதிரிகள் வந்து, தேவிடியா, அவுசாரி என அசிங்கமாகப் பேசி செங்கல் கல்லால் தாக்க முற்பட்டார்கள். நாங்கள் நகர்ந்துகொண்டதால், எங்கள் வீட்டுக் கதவில் செங்கல் பட்டு, கதவு உடைந்துவிட்டது. நாங்கள் சத்தம்போட்டவுடன் அருகிலிருந்த நபர்கள் வந்தவுடன், எதிரிகள் இருவரும் அரிவாள் மற்றும் அரிவாள்மனையுடன் வந்து உன்னைக் கொல்லாமல் விடமாட்டோம் என என்னை மிரட்டினார்கள். அன்றைய

தினம் எனது கணவர் வீட்டிற்கு வந்தவுடன் அவரிடம் நான் தகவல் தெரிவித்தேன். நாங்கள் அன்று இரவு காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். தற்போது, இந்நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் புகார் மனு நான் கொடுத்ததுதான். அதிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் கொடுத்த புகார் அ.சா.ஆ.1 ஆகக் குறியீடு செய்யப்படுகிறது. சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

வழக்கு சம்பந்தமாக, காவல் துறையினர் என்னை எப்போது, எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால், இரண்டு முறை போலீசார் என்னை விசாரித்தார்கள். கடந்த 20.04.2018 ஆம் தேதியன்று, புகார் கொடுத்தபோது விசாரித்தார்கள், அதன்பின்னர், 24.04.2018 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு காவல் நிலையத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். புகார் மனுவின் ரசீதை எனக்கு எப்போது கொடுத்தார்கள் என்றால், கடந்த 20.04.2018 ஆம் தேதி, இரவு 10.00 மணிக்குக் கொடுத்தார்கள். காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்கச் சென்றபோது, யார், யார் சென்றோம் என்றால், என், எனது கணவர் மற்றும் எனது மாமனார், மாமியார் ஆகியோர்கள் சென்றோம். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆன புகாரில், தேதி குறிப்பிடப்படவில்லை என்றால், சரிதான். அ.சா.ஆ.1 ஆன புகாரில் யாரும் சாட்சிக் கையொப்பம் போடவில்லை என்றால், சரிதான். எனக்குக் கொடுத்த மனு ரசீதில் Land Dispute சம்பந்தமாக என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் எத்தனை மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால், 20.04.2018 ஆம் தேதி இரவு 10.00 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த சமயத்தில், எனது கணவர் வீட்டில் இல்லை என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1 ஆன புகாரில் ஐபென் போட்டு "மாலை" என இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால், சரிதான். அதேபோல், மேற்படி புகாரில், எதிரியின் பெயர் முதலில் பாண்டியன் என குறிப்பிடப்பட்டுவிட்டு, அதன்பின்னர், மருது என இடைச்செருகலாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றது என்றால், இரவு 08.00 மணிக்கு சம்பவம் நடைபெற்றது. காவல் நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு எனது கணவர் உடன் வந்தார். அ.சா.ஆ.1 ஆன புகாரை யார் எழுதியது என்றால், என் கணவர் எழுதினார், நான் கையொப்பம் மட்டும் செய்தேன். அ.சா.ஆ.1 ஆன புகாரை என் கணவர் எழுதவில்லை என்றாலும், அவ்வாறு என் கணவர் புகாரை எழுதியிருந்தால், அவர் புகாரில் சாட்சிக்

கையொப்பம் செய்திருப்பார் என்றால், சரியல்ல. கடந்த 16.04.2018 ஆம் தேதி நகராட்சியில் மனுக் கொடுத்தது சம்பந்தமாக, அதன்பின்னிட்டு கடந்த 20.04.2018 ஆம் தேதிக்கு முன்பாக, வட்டாட்சியர் அல்லது சர்வே துறையிலிருந்து யாரேனும் வந்து விசாரித்தார்களா? என்றால் விசாரித்தார்கள், எந்தத் தேதி விசாரித்தார்கள் என்றால், தேதி ஞாபகமில்லை. நான் 16.04.2018 ஆம் தேதியன்று எவ்வித மனுவும் கொடுக்கவில்லை என்றாலும், அது சம்பந்தமாக எவ்வித விசாரணையும் நடக்கவில்லை என்றாலும், கடந்த 20.04.2018 ஆம் தேதி எதிரிகள் எந்தவித சம்பவத்திலும் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், எங்களுக்கும் உள்ள உரிமையியல் பிரச்சனையை, குற்றவியல் பிரச்சனையாக மாற்றுவதற்காக பொய்யாக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளின் வீட்டிற்கும், எங்களது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால், சுமார் 50 மீட்டர் தூரம் இருக்கும், எதிரிகளின் வீட்டைத் தாண்டிதான் எங்கள் வீட்டிற்குச் செல்லவேண்டும். சம்பவ சமயத்தில் எங்களது வீட்டை பராமரிப்பு பணி செய்தோமா? என்றால், இல்லை. சம்பவ சமயத்தில் எங்களது வீட்டருகே யாரேனும் இருந்தார்களா? என்றால், யாரும் இல்லை. எரிரிகள் என்னைப் பார்த்து அசிங்கமாகப் பேசவில்லை என்றாலும், அவர்கள் எங்களது வீட்டுக் கதவை செங்கல்லைக் கொண்டு எறியவில்லை என்றாலும், அரிவாள் மற்றும் அரிவாள்மனையைக் கொண்டு என்னை மிரட்டவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல.

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்குப் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு, என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

AASAY MARUDHU P

Digitally signed by AASAY MARUDHU P
Date: 2026.02.16 20:51:21 +0530

**நீதித்துறை நடுவர் (மு.கூ.பொ.),**
**தேனி.**